# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1435/20 - 2006 මාර්තු 10 වැනි සිකුරාදා - 2006.03.10

*1435/20 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு**

*1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தம்) சட்டத்தின்கீழ் உரிமங்கள், வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திரிபுபடுத்தல் என்பவற்றிற்கான வழிகாட்டிகளும் நடவடிக்கை முறைகளும்*

***உள்ளடக்கம்:***


1. அறிமுகம்
2. விண்ணப்பத்தின் மீளாய்வு
3. விண்ணப்பதாரியுடனும் கம்பனியுடனும் தொடர்புகொள்ளும் விபரம்
4. கம்பனியின் சொத்தாண்மை அமைப்பு
5. உத்தேசிக்கப்பட்ட சேவைகளின் விவரணம்
6. கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கை :

6.1 விண்ணப்பதாரரின் தொழிற்நுட்பத் தகைமை

6.1.1 வலையமைப்பு வடிவம்

6.1.2 வலையமைப்பு உட்கட்டமைப்பும் பரம்பலும்

6.1.3 இணைதொடர் ஏற்பாடுகள்

6.1.4 தொழில்நுட்பவியல்களின் தெரிவு

6.1.5 வரையறைக்குட்பட்ட வளங்களின் மட்டுப்பாடு

6.1.6 சுற்றாடற் கொள்கை

6.2 விண்ணப்பதாரரின் நிதிநிலைமை :

6.2.1 உத்தேசிக்கப்பட்ட மூலதன மற்றும் நிதியளிப்புத் திட்டம்

6.2.2 உத்தேசிக்கப்பட்ட நிதி மற்றும் முதலீட்டுத் திட்டம்

6.3 விண்ணப்பதாரரின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் தேர்ச்சிகள் :

6.3.1 நிலைமையின் பகுப்பாய்வு

6.3.2 விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் திட்டங்கள்

6.3.3 ஏனைய நடவடிக்கைகள்

6.4 வாடிக்கையாளர் சேவைகளுக்கான ஆற்றல் ;

6.4.1 வாடிக்கையாளர் சேவைக்கான நியதி நிபந்தனைகள்

6.5 விண்ணப்பதாரரின் முகாமைத்துவ ஆற்றல் :

6.5.1 உத்தேசிக்கப்பட்ட முகாமைத்துவ அமைப்பு

6.5.2 தொழில் வாய்ப்பு பிறப்பித்தல்

6.5.3 முக்கிய வழங்குநர்கள்

7. வெளிப்படுத்துகை

8. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

9. விண்ணப்பங்களை முறைவழிப்படுத்தல்

10. உரிமமளித்தலின் கணிப்பீட்டு முறை

11. முன்வைத்தல்

12. கணிப்பிட்டின் முடிவுகள்

13. பொது மக்களுக்கான அறிவித்தல்

14. அமைச்சருக்கான விதப்புரை

15. வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தும் தொலைத்தொடர்பு சேவைகளுக்கு உரிமமளித்தல்

16. தகவலின் அந்தரங்கத்தன்மை

17. சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் உரிமங்களை திருபுபடுத்துதல்

18. மேலதிக விசாரணைகள்

1. **அறிமுகம்.-** இந்த ஆவணம் தொலைத்தொடர்பு முறைமையொன்றை தொழிற்படுத்துவதற்கு திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்க விரும்பும் அக்கறைகொண்ட திறந்தவர்களுக்கு வழிகாட்டுதலும் தகவலும் வழங்குவதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டிகள் தொலைத்தொடர்பு முறைமை உரிமமொன்றுக்கான விண்ணப்பப்படிவதத்துடன் (படிவம் S 17) சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

2. **விண்ணபப்பங்களின் மீளாய்வு.-** விண்ணப்பப்படிவம், சட்டத்தின் 17 ஆம் பிரிவிகீழ் உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கும் போது ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவப்படவேண்டிய தகவலின் வகைகளைத் தருகின்றது. தகவல் முன்வைக்கப்பட்டவேண்டிய விதம் பற்றி விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்துதல்களும் இந்த வழிகாட்டிகளில் அடங்கியுள்ளன.

3. **விண்ணப்பதாரர்களுடனும் கம்பனியுடனும் தொடர்புகொள்ளும் விவரங்கள்.-** விண்ப்பத்தின் 1 ஆம் 2 ஆம் பாகங்கள் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியையும் கம்பனியையும் பற்றிய (இதனகத்தின்பின்னர் விண்ணப்பதாரர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அடிப்படைத் தகவலை வழங்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநியைத் தேவைப்படுத்துகின்றன.

4. **கம்பனிச் சொத்துவத்தின் அமைப்பு.-** விண்ணப்பத்தின் பாகம் 3 கம்பனியினுடைய சொத்துவத்தின் அமைப்பிற்கும் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் பணிப்பாளர்களினதும் பங்குதாரர்களினதும் ஏனைய தகவலுக்கும் கவனம் செலுத்துகின்றது. கம்பனியின் வெற்றிக்கான சாத்தியக்கூறுகளை உச்சநிலைப்படுத்துவதற்கு உத்தேச சிரேஷ்ட முகாமைத்துவம் தொலைத்தொடர்புகள் வலையமைப்பொன்றைத் தாபிப்பதிலும் முகாமைசெய்வதிலும் தொழிற்படுத்துவதிலும் முக்கியமான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ***உத்தேசிக்கப்பட்ட சேவைகளின் விவரணம்.***- விண்ணப்பதாரர் எந்தச் சேவைகளுக்காக விண்ணப்பிக்கின்றாரோ அந்தச் சேவைகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பிக்கப்படும் உரிமத்திற்கு இயைபானதாயிருப்பதைத் தீர்மானிப்பதற்கு விண்ணப்பபத்தின் பாகம் 4 உத்தேசிக்கப்பட்ட சேவைகளின் விவரங்களைத் தேவைப்படுத்துகின்றது.

6. ***கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கை.***- விண்ணப்பத்தின் பாகம் 5 விண்ணப்பத்தைக் கணிப்பீடுசெய்யும் நோக்கத்திற்காக கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரரைத் தேவைப்படுத்துகின்றது.

விண்ணப்பதாரர் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பிக்கப்படும் உரிமத்தின்கீழ் சேவைகளை வழங்கும் ஆற்றலுடையவர் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கணிப்பீடுசெய்யும். கணிப்பீடுசெய்யும் கட்டத்தில் ஆணைக்குழு தொலைத்தொடர்புகள் முறைமையொன்றைத் தொழிற்படுத்துவதற்கும் பேணுவதற்கும் தேவைப்படுத்தப்பட்ட கம்பனியின் தொழில்நுட்ப, நிதி, விற்பனை, சந்தைப்படுத்துதல் வாடிக்கையாளர் சேவை, முகாமைத்துவ ஆற்றல்கள், தேர்ச்சிகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு உரிமத்திற்கான விண்ணப்பத்தை மதிப்பீடுசெய்யும்.

கணிப்பீடுசெய்யும்பொழுது (விண்ணப்பத்தின் முறையே 3 ஆம் 4 ஆம் பந்திகளில் விவரிக்கப்பட்ட) விண்ணப்பதாரரின் தகைமை, கம்பனியின் விவரம், விதிப்புரைகள் மற்றும் வேறு கடப்பாடுகள் என்பவற்றையும் கருத்திற்கொள்ளும்.

6.1 ***விண்ணப்பதாரரின் தொழில்நுட்பத் தகைமைகள்.***- விண்ணப்பதாரர் பின்வரும் அம்சங்களில் தொலைத்தொடர்புகள் முறைமையொன்றை வெற்றிகரமாகத் தாபித்தல், முகாமைசெய்தல், தொழிற்படுத்துதல் என்பன பற்றிய சாதனைகளை காண்பிப்பதற்குப் போதியளவு தகவலை சமர்ப்பித்தல் வேண்டும்.

6.1.1 *வலையமைப்பு அமைவடிவம்.*- விண்ணப்பதாரர் பிரதான ஆளி அமைப்பிடங்களையும் இருக்கும் ஏனைய இடங்களையும் அனுப்புகை மார்க்கங்களையும் நான்கு ஆண்டுகள் வரையிலான தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய இணைத்தொடர்பு முறைகளையும் இனம் காட்டும் உத்தேசத் தொழிற்பாட்டு வலையமைப்புக் கட்டிட நிர்மாண வரைபடமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். பின்வருவன உட்பட வலையமைப்பின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாட்டு வடிவத்தை முற்றாக விவரிக்கவும்.

(அ) தொழில்நுட்ப விவரக்கூற்றுக்கள், இயைபான தொழிநுட்ப நியமங்கள், நியமங்களுடனான ஒத்திசைவு.
(ஆ) வலையமைப்பிற்குட்பட்ட அனைத்து இடைமுகைங்களினதும் விவரணம்.
(இ) சேவையின் உத்தேசிக்கப்பட்ட தரம்.
(ஈ) சேவை நியதிகளின் தரம் தொடர்பிலான தகவலும் சேவைத் தரத்தின் இலக்குகள் பற்றிய விவரங்களும்.
(உ) உத்தேசிக்கப்பட்ட பட்டியலிடும் முறைமையும் விலை நிர்ணயத்திற்கு அது எப்படி ஆதாரமாகும் என்பதும்.

விண்ணப்பதாரர் வலையமைப்பு முகாமைத்துவ தொழில்நுட்பச் செயல் நுணுக்கத்தையும் உத்தேசிக்கப்பட்ட தீர்வையையும் வலையமைப்புப் பயன்பாட்டு வினைத்திறன், சேவை வழங்குதல், நெகிழ்வு தன்மை என்பவற்றிற்கு அது வழங்கும் நன்மைகள் என்பவற்றை விவரித்தல் வேண்டும்.

6.1.2 *வலையமைப்பு உட்கட்டமைப்பும் பரம்பலும்.*- வலையமைப்பின் பொதுப்படையான வினைத்திறனை மதிப்பீடுசெய்வதற்கு பொதுவான உட்கட்டமைப்பையும் உறுப்புகளையும் தேசிய, சர்வதேச வலையமைப்புகளின் உறுப்புகளையும் விவரிக்கவும். விவரணத்தில் வலையமைப்பு முகாமைத்து ஆற்றல்களை, வழிப்படுத்துதற்திட்டம், அனுப்புகைத் திட்டம், சைகைத்திட்டம், விரிவாக்கற் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பதாரர் பரந்த வலையமைப்பு வெளித்தள்ளல் திட்டமொன்றையும் வலையமைப்பு வெளித்தள்ளல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதன் செயல்நுட்பத்தைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

விண்ணப்பதாரர் குறியிலக்குத் துலங்கள், பழுது பிரிதிறன் நேரங்கள் உட்பட பாரதூரமான மற்றும் பாரிய பழுதுகளுக்கு வலையமைப்புப் பழுது பிரிதிறனின் பொதுநிலை நடைமுறையை விவரித்தல் வேண்டும்.

மேலும், விண்ணப்பதாரர்கள், சேவைகள் ஆரம்பிக்கப்படுவதன்மீது வலையமைப்பின் திட்டமிடப்பட்ட புவியல் ஆவரணத்தினதும் தொழிற்படும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வலையமைப்புக் கொள்ளளவு விசாலிப்புத் திட்டங்களிதும் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்கான கடப்பாடுகளினதும் விவரங்களைத் தருதல் வேண்டும். வலையமைப்பில் தொழிலுக்கமர்த்தும் செலவைக் குறைத்து சேவைப் பரம்பலை அதிகரிப்பதற்காக ஏனைய தொலைத்தொடர்புகள் சேவை வழங்குநர்களுடன் உத்தேசிக்கப்பட்ட உட்கட்டமைப்பைப் பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைத் தருதலும் வேண்டும்.

6.1.3 *இடைப்பிணைப்பு ஏற்பாடுகள்.-* விண்ணப்பதாரர்கள் சமிக்ஞையிடல், அனுப்புகை ஒத்தியக்கம் என்பன உட்பட ஏனைய தொடுக்கப்படற்பாலதான தொழிற்பாட்டாளர்களுடன் இணைத்தொடருக்கான சுற்றுத் தேவைப்பாடுகளை வழங்கும் தொழில்நுட்பப் பிரேரணைகளைத் தருதல் வேண்டும். இது இணைத்தொடர் அமைவடிவம், இடைத்தொடர் புள்ளிகள், பரவலாக்கல் இடைமுக தேவைப்பாடுகள், பரவலாக்கல் ஏற்பாடுகள் என்பவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்.

6.1.4 *தொழில்நுட்பவியல்களைத் தெரிவுசெய்தல்.-* விண்ணப்பதாரர்கள், அடிப்படை, அகலப்பாட்டை மற்றும் சேர்பெறுமதி சேவைகளை வழங்குவதற்கு நிலைமாற்றுகை, அனுப்புகை மற்றும் உள்ளூர் அணுக்க முறைமைகள் என்பவற்றிற்குக் கையாளப்படவுள்ள தொழில்நுட்பவியல்களின் விபரங்களைத் தருதல் வேண்டும்.

6.1.5 *மட்டுப்படுதுதப்பட்ட வளங்களின் பயன்பாடு.-* கதிர் வண்ணப்பிரிக்கை எண்ணிக்கைகள் மற்றும் வலையமைப்பு விரிவுபடுத்துகைக்கான வலையமைப்பின் எண்ணிக்கைகள், அவற்றிற்கான வழியுரிமைகள் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பயன்படுத்தத் திட்டமிடல் விண்ணப்பதாரர்கள் வைத்திருக்கத் திட்டமிடும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் தேவைப்பாடுகளுடனான உட்கட்டமைப்பு வலையமைப்பின் பொழிப்பொன்றைத் தருதல் வேண்டும்.

கதிர் வண்ணப்பிரிக்கையின் பாவனைக்கு வலையமைப்பின் அலைவு எண் தேவைப்பாடுகளையும், அலைவு எண் பயன்படுத்தப்படும் முறைகளையும் விண்ணப்பதாரர் தருதல் வேண்டும். அத்தகைய வண்ணப்பிரிக்கையின் ஒழுங்குமுறையான, திறமைமிக்க பயன்பாட்டை அவர் எப்படி உறுதிப்படுத்துவார் என்பதனையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

எண்களின் ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் எண்கள் கொண்டேகி அணுக்கக் குறிமுறையா, கொண்டேகி தெரிவுக் குறிமுறையா, புவியியல் சார்ந்த, புவியியல் சாராத அல்லது வேறு எண்களா என்பதனை விவரித்தல் வேண்டும்.

6.1.6 *சூழல் கொள்கை.-* விண்ணப்பதாரர் பின்வருவற்வற்றை கருத்திற்கொள்ளும் ஒரு சூழல் கொள்கையையும் திட்டத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) வழமையான தொழிற்பாட்டின்போது கழிவு உற்பத்திப்பொருட் தீர்ப்புகளைக் குறைத்தல்.
(ஆ) ஏனைய தொலைத்தொடர்பு முறைமைகளுக்கு கதிர் அலைவு எண், கதிர்வீச்சு மற்றும் மின்காந்த இசைவு (EMC) தாக்கங்களைக் குறைத்தல்.
(இ) தீங்கு விளைவிக்கும் மிதமிஞ்சிய பொருட்களை தோதான முறையில் கையுதிர்த்தல்.
(ஈ) மீள்பயனுறுத்தப்படற்பாலதான பொருட்களின் உச்சப் பயன்பாடு.
(உ) இயற்கை வனப்பைப் பேணிக்காத்தல்.
(ஊ) சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்தும் உபகரணத்தின் பயன்பாடு.
(எ) இயற்கை சூழலைப் பேணிக்காத்தல் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள்.

6.2 *விண்ணப்பதாரரின் நிதி நிலைமை.-* விண்ணப்பதாரர் உத்தேசிக்கப்பட்ட முறைமையின் தொழிற்பாட்டிற்கு அதன் விரிவான மூலதனம், நிதியளிப்பு மற்றும் நிதிசார்ந்த திட்டங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அதில் பின்வருவன அடங்குதல் வேண்டும்.

6.2.1 *உத்தேசிக்கப்பட்ட மூலதன மற்றும் நிதியளிப்புத் திட்டங்கள்.-* பின்வருவன உட்பட முதல் நான்கு ஆண்டுகளுக்கு உத்தேசிக்கப்பட்ட மூலதன மற்றும் நிதியளிப்புத் திட்டங்களின் விபரம் :

(அ) அதன் உத்தேசிககப்பட்ட மூலதன அமைப்பின் விரிவான விவரணமொன்று, அதில் தொழிற்பாட்டு மூலதனத் திட்டம் குறைந்தபட்ச தனிசு மற்றும் ஒப்புரவு உட்பட திநியளிப்புச் சாதனங்களின் விவரங்கள்.
(ஆ) நிதியளிப்பின் மூலவளம் மற்றும் ஒவ்வொரு மூலவளத்திலிருந்து கிடைக்கும் தொகை.
(இ) நிதியளிப்புத் தொடங்கும் நேரங்கள், கிடைக்கத்தகு கடன்வசதிகள்.
(ஈ) எதிர்பாரா நிதி வளத்திற்குச் செய்யப்பட்டுள்ள எற்பாடுகள்
(உ) கடன்களுக்கும் தொகுதிக் கடன்களுக்கும் மீள்கொடுப்பனவுத் திட்டங்களும் அட்டவணைகளும்.
(ஊ) விண்ணப்பிக்கப்படும் தொலைத்தொடர்பு முறமைகளுக்கு காலாண்டு அடிப்படையொன்றில் மூலதனச் செலவினத்தினனதும் தொழிற்பாட்டுச் செலவினத்தினதும் முற்கூற்று.
(எ) (அ) முதல் (உ) வரையிலான விடயங்கள் தொடர்பில் கம்பனியின் கடந்தகால செயற்பாடு (ஏற்புடைத்தாயின்).

தொழில், நிதி, விண்ணப்பதாரர் நிதியளிப்புத் திட்டங்கள், கடன்வசதிகள் என்வற்றை காண்பிப்பதற்குப் போதுமான முன்னம்பற்றிய கடிதங்கள், உத்தரவாதக் கடிதங்கள் போன்ற இயைபான ஆவணச் சான்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.2.2 *உத்தேசிக்கப்பட்ட நிதி மற்றும் முதலீட்டுத் திட்டங்கள்.*- தொழிற்பாட்டின் முதல் நான்கு ஆண்டுகளுக்கும் உத்தேசிக்கப்பட்ட நிதி சார்ந்த திட்டங்களின் விவரங்கள், பின்வருவன உட்பட :

(அ) திட்டமிடப்பட்ட இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைகள், பணப்பாய்ச்சல் கூற்றுக்கள், இலாப நட்டக் கணக்குகளும் ஐந்தொகைகளும் பணப்பாய்ச்சல் கூற்றுக்களும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும். சொத்துப் பெறுமானத்தேய்வுக் கொள்கைகள், ஒப்பபப்பணம் செலுத்துநர் திட்டங்கள், தொழிற்பாட்டுச் செலவினம் முதலியவற்றில் வருடாந்த வேறுபாடுகள் முதலியன தெளிவாக விவரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தொழிற்படுத்தப்பட்ட மூலதனத்தின்மீதான வருவாய், சொத்துக்களின் மீதான வருவாய், தொழிற்பாட்டு இலாப வரம்பு, தேறிய இலாப வரம்பு, மூலதன முதலீட்டு விகிதாசாரம், நடைமுறை விகிதாசாரம், தனிசு- ஒப்பரவு விகிதாசாரம் என்பன உட்பட திட்டமிடப்பட்ட நிதி சார்ந்த விகிதாசாரங்கள், விகிதாசாரம் ஒவ்வொன்றையும் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சூத்திரமும் வழங்கப்படுதல் வேண்டும்.

(இ) குறைந்தபட்சமாக உள்ளக வருமான வீதம் (உ.வ.வீ.) தற்போதைய தேறிய பெறுமதி (த.தே. பெ.) முதலீட்டின் மறுகொடுப்பனவுக் காலப்பகுதி என்பன உட்பட இயைபான நிதிசார்ந்த அளவை முறைகள், அதைவிட 10% வீதப்படியானதும் மீள்கொடுப்பனவுக் காலப்பகுதிக்கு நேரொத்ததுமான தற்போதைய தேறிய பெறுமதியும் கணிப்பிடப்படுதல் வேண்டும். தொழில் இலாபகராமக அமையும் என எதிர்பார்க்கப்படும் கால வரையறையையும் விண்ணப்பதாரர் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) உறுப்புகளின் செலவையும் இணைதொடர் கட்டணங்களையும் கணிக்கும் வலையமைப்பு மூலகங்களைக் கட்டவிழ்ப்பதற்கு வசதியளிப்பதற்காக கையாளப்படவுள்ள ஆகுசெலவு கணக்கீட்டு முறைமைகளின் விவரங்கள்.

(உ) மேலே (அ) முதல் (ஈ) வரையிலான விடயங்கள் தொடர்பில் கம்பனியின் கடந்தகால செயற்பாடு.

6.3 ***விண்ணப்பதாரரின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் திறமைகள்.***- பின்வருவன தொடர்பில் இலங்கையில் தொலைத்தொடர்புகள் சந்தையில் போட்டியிருவதற்குப் பயன்படுத்தப்படும் கால நிர்ணயங்களும் போட்டி செயல்நுட்பங்களும் உட்பட தொழிற்பாட்டின் முதல் நான்கு ஆண்டுகளில் விண்ணப்பதாரர் வழங்க உத்தேசிக்கும் அனைத்துச் சேவைகளினதும் விவரங்கள் விரிக்கப்படுதல் வேண்டும்.

6.3.1 *நிலையமையின் பகுப்பாய்வு.*- பின்வருவன உட்பட நிலைமையின் பகுப்பாய்வு பற்றிய விவரங்கள்:

(அ) சந்தைத் திருப்பங்கள் எப்படி கம்பனியின் சேவைகள்மீது செல்வாக்குக் கொண்டிருக்கும் என்பதனைக் காட்டுவதற்கு முக்கிய சந்தைத் தீரப்பங்கள் பற்றி பகுப்பாய்வு.

(ஆ) உத்தேசிக்கப்பட்ட தொழிலில் போட்டி நிலைமையின் தாக்கம்.

(இ) சேவைகளின் ரீதியில் பிரிக்கப்பட்ட தொழிற்பாட்டின் விரிவான விற்பனைத் திட்டம், பிரதான குறி இலக்குச் சந்தை (உதாரணமாக மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை, வதிவிடமா அல்லது தொழிலா என்பன) வாடிக்கையாளர் வகை மற்றும் சந்தை வழிமுறை.

(ஈ) முற்கூறப்பட்ட வருடாந்த விற்பனை வரவுசெலவுத் திட்ட முறையை விவரிக்கவும்.

6.3.2 *விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் திட்டங்கள்.*- விண்ணப்பதாரர் உத்தேசிக்கப்பட்ட சேவைகளையும் பின்வருவன உட்பட விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் திட்டங்களையும் விவரித்தல் வேண்டும் :

(அ) குறித்துரைக்கப்பட்ட தொலைத்தொடர்பு சேவைகள் வழங்கப்படவுள்ள இடப்பரப்பொன்றில் சேவைக்கென மதிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை.

(ஆ) சந்தைப்படுத்தும் ஊடகத்தால் அதாவது நேரடிச் சந்தைப்படுத்துதல், விளம்பரப் பலகைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், தொலைக்காட்சி முதலியவற்றில் செலவிடப்படும் தொகை உட்பட விரிவான சந்தைப்படுத்தும் திட்டமொன்று.

(இ) சேவை, இலக்குப் பிரிவுகள், புவியியல் இடப்பரப்பு வகை அதாவது நகரம், சுற்றயல், கிராமம் என்பவனவற்றின் ரீதியில் முற்கூறப்பட்ட விற்பனைகள்.

(ஈ) இனம்காணப்பட்ட சந்தை எதிர்மறை விளைவுகள், தொடர்புடைய தணிப்புத் திட்டங்கள் (தோதானதாயின்).

(உ) வருங்கால செலவீட்டுக் கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு விண்ணப்பதாரரின் செயல்நுட்பங்கள்.

(ஊ) ஆராய்ச்சி, அபிவிருத்தி உட்பட புதிய சேவை அபிவிருத்தித் திட்டங்கள்.

6.3.3 *ஏனைய நடவடிக்கைகள்.*- விண்ணப்பதாரர் பின்வரும் விவரங்களைத் தருதல் வேண்டும் :

(அ) நியாயமான சந்தைப்படுத்தலையும் சூழ்நிலைச் சந்தைப்படுத்துகையில் பிணக்குகளைத் தீர்த்தலையும் உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் நடைமுறைக்கோவை.

(ஆ) தொலைத்தொடர்புகள் சந்தையிலும் அதற்கு வெளியேயும் கம்பனியின் ஏனைய வியாபார நடவடிக்கைகளும் விண்ணப்பதாரர்களுக்கடையில் குறுக்கீட்டு மானியம் எதுவுமில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக செய்யப்படும் ஏற்பாடுகள்–

* மொத்தவிற்பனை மற்றும் சில்லறை விற்பனை செய்ற்பாடுகள்.
* தொலைத்தொடர்பு சார்ந்த மற்றும் தொலைத்தொடர்புகள் சாராத செயற்பாடுகள்.
* தொலைத்தொடர்பு உபகரணங்களின் உற்பத்தி அல்லது விநியோகம்.
* ஏனைய தொலைத்தொடர்பு நடவடிக்கைகள்.

6.4 ***வாடிக்கையாளர் சேவைகளின் ஆற்றல்.***- விண்ணப்பதாரர் பின்வருவன உட்பட வாடிக்கையாளர்களுக்கான உத்தேச சேவைகளை வழங்குவதற்கான நிதி நிபந்தனைகளைக் கொடுத்தல் வேண்டும் :

(அ) வாடிக்கையாளரின் கவனிப்பிற்கும் உத்தேசிக்கப்பட்ட சேவை மட்டங்களுக்கும் ஆதரவளிக்கத் தேவைப்படும் முறைமைகள், வதிவிட மற்றும் தொழில் வாடிக்கையாளர்கள் உட்பட அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்தச் சேவை மட்டங்கள் எப்படி ஆதரவளிக்கும் என்பதைப்பற்றிய விவரம் ஒன்றை உள்ளடக்கவும்.

(ஆ) வதிவிட மற்றும் தொழில் வாடிக்கையாளர்களுக்கான ஒப்பந்த நியதிகள் அத்துடன் எல்லா வகுப்பினரையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுடனான நடப்பு ஒப்பந்தங்களின் பிரதிகள்.

(இ) வாடிக்கையாளர்களால் செய்யப்படும் முறைப்பாடுகளை நியாயமாகத் தீர்ப்பதற்கும் வாடிக்கையாளர்களிடமிருந்து சேவைகளை வாபஸ் பெறுவதற்குமான நடைமுறைகள் உட்பட வாடிக்கையாளர்கள் தொடர்பில் ஏதேனும் நடைமுறைக் கோவை.

(ஈ) உத்தேசிக்கப்பட்ட சேவை மட்டங்களும் இச்சேவை மட்டங்கள் எப்படி ஆதரிக்கபப்டும் என்ற விவரணமும்.

(உ) சேவைகளுக்கான விதிப்பனவுகள், வாடிக்கையாளருக்கு விலைப்பட்டியல் தயாரித்தல் உட்பட நியதி நிபதனைகள் அனைத்தையும் ஒளிவுமறைவற்ற முறையில் வெளியிடுவதற்குக் கையாளப்படும் வழிமுறைகள்.

(ஊ) வாடிக்கையாளர்களின் முறைப்படுகளை பயனுறுதியுடனும் நியாயமாகவும் தீர்ப்பதற்கு கையாளப்படவுள்ள வழிமுறைகள்.

6.5 ***விண்ணப்பதாரரின் முகாமைத்துவ ஆற்றல்.***- விண்ணப்பதாரர் கம்பனியின் முகாமைத்துறை அமைப்பு, தொழில்வாய்ப்பு உண்டுபண்ணுதல், தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்பன பற்றிய விவரங்களை விளக்குதல் வேண்டும்.

6.5.1 *உத்தேச முகாமைத்துவ அமைப்பு.*- விண்ணப்பதாரர் பின்வருவனவற்றை விவரித்தலும் அவற்றிற்கு ஏற்பாடுசெய்தலும் வேண்டும் :

(அ) கம்பனியின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துறை அமைப்பு, இதில் பணியாட்டொகுதி, பயிற்சி என்பன உட்பட விண்ணப்பதாரரின் பிரதான உறுப்புகள் அனைத்தையும் பற்றிய விபரங்களுடன்.

(ஆ) உத்தேசிக்கப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவ அணி உறுப்பினர்களின் சுருக்கமான விவரம். குறைந்தபட்சம் கல்வி மற்றும் உயர்தொழில் தகைமைகளும் கடந்த பத்து ஆண்டுகளுக்குத் தொழில் பற்றிய வரலாறும் தரப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பிக்கப்படும் தொலைத்தொடர்பு வலையமைப்பைத் தாபித்தல், முகாமைசெய்தல் என்பவற்றிற்கு இயைபான சிரேஷ்ட முகாமைத்துவ அணி உறுப்பினர்களின் குறித்துரைக்கப்பட்ட அனுபவம்.

6.5.2 *தொழில் வாய்ப்பை உண்டுபண்ணல்.*- பின்வருவன உட்பட இலங்கை மக்களுக்கு நேரடித் தொழில் வாய்ப்புகளின் அளவும் தரமும் பற்றிய குறிப்பீடொன்று ஆணைக்குழுவுக்கு வழங்கப்படுதல் வேண்டும் :

(அ) பின்வரும் வட்டவணையைப் பூர்த்தி செய்வதன்மூலம் முதல் நான்கு ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதிக்கு உத்தேசிக்கப்பட்ட தொழில்கள்.

| | | முதலாம் ஆண்டு | | இரண்டாம் ஆண்டு | | மூன்றாம் ஆண்டு | | நான்காம் ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்ளூர் | வெளிநாடு | உள்ளூர் | வெளிநாடு | உள்ளூர் | வெளிநாடு | உள்ளூர் | வெளிநாடு |
| தொழில்நுட்பம் | சிரேஷ்ட | | | | | | | | |
| | நடுத்தர | | | | | | | | |
| | கனிஷ்ட | | | | | | | | |
| விற்பனை சந்தைப்படுத்துதல் | சிரேஷ்ட | | | | | | | | |
| | நடுத்தர | | | | | | | | |
| | கனிஷ்ட | | | | | | | | |
| நிதி | சிரேஷ்ட | | | | | | | | |
| | நடுத்தர | | | | | | | | |
| | கனிஷ்ட | | | | | | | | |
| சட்டம் | சிரேஷ்ட | | | | | | | | |
| | நடுத்தர | | | | | | | | |
| | கனிஷ்ட | | | | | | | | |
| ஏனையவை | சிரேஷ்ட | | | | | | | | |
| | நடுத்தர | | | | | | | | |
| | கனிஷ்ட | | | | | | | | |

6.5.3 *முக்கிய வழங்குநர்கள்*- விண்ணப்பதாரர் அதன் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு வலையமைப்பு கட்டியயெழுப்பப்படும்போதும் சேவையின் தொழிற்பாடு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரும் உத்தேசிக்கப்பட்ட எல்லா முக்கயமான வழங்குநர்களின் விவரங்களைத் தருதலும் அவர்களின் பணிகளை விவரித்தலும் வேண்டும். விவரங்களில் குறைந்தபட்சம் பின்வருவன அடங்குதல் வேண்டும் :

(அ) தொழிலின் பெயரும் அதன் வகையைப் பற்றிய சுருக்கமான விவரணமும்.
(ஆ) கம்பனியுடனான தற்போதைய அல்லது முந்திய உறவுகளின் விவரணம்
(இ) உத்தேசிக்கப்பட்ட வர்த்தக உறவுகளைப் பற்றிய விவரணம்.

விண்ணப்பதாரர் அதிக விருப்பத்திற்குரிய வழங்குநர்களுக்கும் பண்டங்களின் கொள்வனவுக்கும் அதிகாரமளிக்கும் பொது முறைவழியை விவரித்தல் வேண்டும். இதில் கொள்வனவுக்கு அதிகாரமளிக்கும் கொள்கை பற்றிய விவரங்களும் அடங்குதல் வேண்டும்.

7. **வெளிப்படுத்துகை.**- விண்ணப்பதாரர் தகவலின் செம்மையை உறுதிப்படுத்தி விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் வெளிப்படுத்துகையொன்றுக்கு. கையொப்பமிடுமாறு தேவைப்படுத்தப்படுவார். அத்துடன் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுடனும் எல்லா நேரங்களிலும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.**– விண்ணப்பதாரர் தேவைப்படுத்தப்பட்ட தகவலையும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களையும் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதன்மீது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படற்பாலதான முறைவழிப்படுத்தும் கட்டணம் 2,00,000 ரூபாவைச் செலுத்துமாறு விண்ணப்பதாரர் தேவைப்படுத்தப்படுகின்றார்.*

*பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் மூன்று பிரதிகளும் கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையும் முறைவழிப்படுத்தும் கட்டணமும் கடித உறையில் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழான உரிமத்தின் விண்ணப்பம் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:–*

*பணிப்பாளர் நாயகம்,*
*இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு,*
*இல. 276, எல்விட்டிகல மாவத்தை,*
*கொழும்பு 8.*

*வெளிப்படுத்துகையில் கையொப்பமிடும் கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி விண்ணப்பத்தினதும் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையினதும் ஒவ்வொரு பக்கத்திலும் முதலெழுத்தொப்பம் இடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமும் கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையும் இலத்திரனியல் வடிவத்தில் நெகிழ் வட்டு (Floppy Diskette) அல்லது இறு வட்டு (CD) ஒன்றில் சமர்ப்பிக்கப்படின் விரும்பத்தக்கது. முறைவழிப்படுத்தும் கட்டணம் செலுத்தப்படும்வரை விண்ணப்பம் எதுவும் பரிசீலனை செய்யப்படமாட்டாது.*

*9. **விண்ணப்பத்தை முறைவழிப்படுத்துதல்.**- விண்ணப்பமொன்றை முறைவழிப்படுத்துகையில் ஆணைக்குழு விண்ணப்பப் படிவம் முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டிப்பதையும் நிர்வாக விவரங்கள் முறையாக இருப்பதையும் உறுதிப்படுத்தும், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள செவ்வைப் படிவமொன்று விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்களின் வகையைப் புரிந்துகொள்வதற்கு விண்ணப்பதாரர்களுக்குத் துணைபுரியும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் இயைபான ஆவணங்களுடன் தோதான முறைவழிப்படுத்தும் கட்டணத்துடனும் சேர்த்து ஆணைக்குழுவால் கிடைக்கப்பட்டதன்பேரில் ஆணைக்குழு விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமையை அறிவிக்கும்.*

*விண்ணப்பதாரரால் வழங்கப்பட்டுள்ள தகவல் விண்ணப்பத்தை ஆதரிப்பதற்குப் போதுமானதல்ல என ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து மேலதிக தகவல் கோரப்படலாம். இதனால் விண்ணப்பம் தாமதமாகலாம். இந்நிலையில் ஆணைக்குழு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு வாரங்களுக்குள் கோரப்பட்ட தகவலை வழங்குமறு விண்ணப்பதாரரைப் பணிக்கும்.*

*ஆணைக்குழுவின் இந்தப் பணிப்பிற்கு விண்ணப்பதாரர். இணங்கியொழுகத் தவறுமிடத்து அதன் விளைவாக விண்ணப்பம் இந்த உரிமமளிக்கும் முறைவழியிலிருந்து தகைமையிழந்துவிடும்.*

*10. **உரிமமளித்தலைக் கணிப்பீடுசெய்யும் முறைவழி.**– ஆணைக்குழு உரிமமொன்றை வழங்குவதற்காக விண்ணப்பதாரரின் தகுதியை சரிபார்ப்பதற்கு விண்ணப்பத்தை நியம கணிப்பீட்டு மூலப் பிரமாணத்திற்கெதிராக மதிப்பீடுசெய்யும். இக்கணிப்பீட்டு முறைவழியில் தொலைத்தொடர்பு முறைமையொன்றை நடத்துவதற்கு விரிவான தொழில்நுட்பம், நிதி, விற்பனை, சந்தைப்படுத்துதல்., வாடிக்கையாளர் சேவை, விண்ணப்பதாரரின் முகாமைத்துவ ஆற்றல்கள், தேர்ச்சிகள் என்பன இணைந்திருக்கும். விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல் ஆணைக்குழுவால் சரிபார்க்கப்பட்டவுடன் கணிப்பீட்டு வழிமுறை ஆரம்பமாகும். கணிப்பீட்டில் விண்ணப்பதாரர் உரிமத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதோடு அதன் தொழிற்பாடுகளையும் நிலைபெறச் செய்யும் அதே வேளையில் போதியளவு வளங்களையும் அனுபவத்தையும், அத்தகைய உரிமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள அரிய வளங்களை சிக்கனமான பாவனைக்கு உட்படுத்தும் தேர்ச்சியையும் திறமையையும் கொண்டுள்ளது என ஆணையாளர் திருப்தியுறுதல் வேண்டும். போதியளவில் அல்லாத வளங்கள், அல்லது மேற்கூறப்பட்ட துறைகளில் ஆற்றலின்மை விண்ணப்பத்தை நிராகரிப்பதற்குப் போதுமான காரணமாகும். ஆதலால், விண்ணப்பதாரர் உத்தேசிக்கப்பட்ட சேவைகளை வழங்குவதற்கும், உத்தேசிககப்பட்ட வலையமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமான ஆற்றல்களையும் தேர்ச்சியையும் கொண்டுள்ளார் என்பதற்குத் தெளிவான சாட்சியத்தை அளிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.*

*11. **நேரில் வருகைதருதல்.**– விண்ணப்பதாரர்கள் நேரில் வருகைதருமாறு தேவைப்படுத்தப்படலாம். நேரில் வருகை தருவதன் நோக்கம் உத்தேசிக்கப்பட்ட சேவையின் ஏதேனும் அம்சத்தை அல்லது எவையேனும் அம்சங்களை விவரிப்பதற்கும் நியாயப்படுத்துவதற்கும் ஆகும்.*

*12. **மதிப்பீட்டின் முடிவு**.- கணிப்பீடுசெய்யும் முறைவழியின்போது விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட தகவல்கள் தரவரிசைப்படுத்தப்படும் 70% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமம் ஒன்று வழங்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும். ஆணைக்குழு விண்ணப்பத்திலுள்ள தேவைப்பாடுகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் உரிமம் ஒன்று வழங்குதல் தொடர்பில் அதன் முடிவை விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கும். உரிமம் ஒன்றை மறுப்பதற்கான காரணங்கள் வேண்டுகோளின்மீது அறியத்தரப்படும்.*

*பணிப்பாளர் நாயகம்,*
*இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு,*
*இல. 276, எல்விட்டிகல மாவத்தை,*
*கொழும்பு 8.*

| | | |
|---|---|---|
| *தொலைபேசி* | : | *2689345* |
| *தொலைநகல்* | : | *2689341* |
| *மின்னஞ்சல்* | : | dgtr@sltnet.lk |
| *இணையத்தளம்* | : | www.trc.gov.lk |

*படிவம் S 17*

## தொலைத்தொடர்புகள் முறைமைகளின் உரிமமொன்றிற்கான விண்ணப்பப்படிவம்

*1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புகள் (திருத்தம்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ்)*

**விளக்கக் குறிப்புகள்**

* *இப்படிவத்தை நிரப்புவதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் உரிமமளிக்கும் வழிகாட்டிகளையும் நடைமுறைகளையும் ஆணைக்குழுவின் விண்ணப்பக்கணிப்பீட்டின் மூலப்பிரமாணங்களையும் வாசித்தல் வேண்டும்.*
* *அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப்படிவத்தை (S17) நிரப்புதல் வேண்டும்.*
* *விண்ணப்பம் அச்சில் அல்லது தனித்தனி எழுத்துக்களில் பூரணமாக நிரப்பப்படுதல் வேண்டும்.*
* *விண்ணப்பம் சரியான ஒழுங்கு முறையில் தெளிவாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கோரப்பட்ட தகவல் உத்தேசிக்கப்பட்ட தொலைத்தொடர்புகள் முறைமைக்கு ஏற்புடைத்தாகாவிடில் தயவுசெய்து ஏ/ஆ என எழுதவும்.*
* *தரப்பட்டுள்ள இடைவெளி கோரப்பட்ட தகவலுக்குப் போதாதெனில் விண்ணப்பதாரர்கள் மேலதிகத் தாள்களை இணைத்தல் வேண்டும். மேலதிகப் பக்கங்களிலுள்ள தகவல் தெளிவாகச் சமர்ப்பிக்கப்படுதலும் இப்படிவத்திற்கிணங்க இலக்கமிடப்படுதலும் வேண்டும். இணைக்கப்பட்ட பக்கங்கள் எவையும் ஏ4 அளவுத் தாள்களில் அச்சிடப்படுதல் வேண்டும்.*
* *விண்ணப்பப்படிவத்தில் செய்யப்படும் ஏதேனும் திருத்தத்திற்கு அல்லது மாற்றத்திற்கு அருகில் விண்ணப்பதாரர்கள முதலேழுத்தொப்பமிட்டு திகதியிடுதல் வேண்டும்.*
* *விண்ணப்பதாரர்கள், இணைக்கப்பட்ட தாள்களும் கருத்திட்ட சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையொன்றும் உட்பட விண்ணப்பத்தில் 3 பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.*

*பணிப்பாளர் நாயகம்,*
*இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு,*
*276, எல்விட்டிகல மாவத்தை,*
*கொழும்பு 8.*

| | | |
|---|---|---|
| *தொலைபேசி* | : | *2689345* |
| *தொலைநகல்* | : | *2689341* |
| *மின்னஞ்சல்* | : | dgtr@stlnet.lk |
| *இணையத்தளம்* | : | www.trc.gov.lk |

*பாகம் 1*

1. **அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் (விண்ணப்பதாரர்) தொடர்புகொள்ளும் விவரங்கள் :**

அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விண்ணப்பதாரர்) தம்மைப்பற்றி பின்வரும் தகவலை வழங்குதல் வேண்டும். (தேசிய அடையாள அட்டையின்/கடவுச் சீட்டின் இயைபான பக்கங்களின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.)

1.1 முழுப் பெயர் :.......................................................................................
1.2 பிறந்த திகதி :..................................................................
1.3 தேசிய அடையாள அட்டை/கடவுச் சீட்டு இலக்கம் :................................................................
1.4 பிரசாவுரிமை :........................................................................................
1.5 முகவரி :...........................................................................................
1.6 தொலைபேசி இலக்கம் :.....................................................................................
1.7 தொலைநகல் இலக்கம் :.....................................................................................
1.8 மின்னஞ்சல் முகவரி :..................................................................................

*பாகம் 2*

2. **கம்பனியின் தொடர்புகொள்ளும் விபரங்கள் :**

விண்ணப்பதாரர் தமது கம்பனி தொடர்பில் பின்வரும் தகவலை வழங்குதல் வேண்டும். அதற்கு ஆதாரமாக வியாபாரக் கூட்டிணைப்புச் சான்றிதழ், அமைப்புப் புறவிதிகள், அகவிதிகள் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

2.1 கம்பனியின் பதிவு இலக்கம் :.......................................................................................
2.2 வியாபாரப் பதிவு இலக்கம் :.......................................................................................
2.3 கூட்டிணைக்கப்பட்ட திகதி :.......................................................................................
2.4 பதிவுசெய்யப்பட்ட வியாபார முகவரி :.......................................................................................
2.5 தொலைபேசி இலக்கம் :.....................................................................................
2.6 தொலைநகல் இலக்கம் :.....................................................................................
2.7 மின்னஞ்சல் முகவரி :..................................................................................
2.8 வியாபாரக் கணக்கு பேணப்படும் வங்கியின் பெயரும் தொடர்புகொள்ளும் விவரங்களும் :......................................

*பாகம் 3*

3. **கம்பனியின் சொத்தாண்மை அமைப்பு :**

விண்ணப்பதாரர் கம்பனியின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் பணிப்பாளர்களினதும் கம்பனியின் 5% வீதத்திற்கும் அதிகமான பங்குகளைக் கொண்டுள்ள பங்குதாரர்களினதும் பின்வரும் விவரங்களை வழங்குதல் வேண்டும். அவற்றிற்கு ஆதாரமாக இயைபான ஆவணச் சான்றை முன்வைத்தல் வேண்டும். (தேசிய அடையாள அட்டைகளின்/கடவுச் சீட்டுக்களின் இயைபான பக்கங்களினதும் இயைபான வேறு ஆவணங்களினதும் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

*3.1 பிரதான நிறைவேற்று அலுவலரும் பணிப்பாளர்களும் :*

விண்ணப்பதாரர் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும் :

(அ) முழுப் பெயர் :.......................................................................................
(ஆ) பிறந்த திகதி :.......................................................................................
(இ) நாட்டினம் :.......................................................................................
(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச் சீட்டு இலக்கம் :..............................................
(உ) பிரசாவுரிமை :.......................................................................................
(ஊ) சொந்த முகவரி :.......................................................................................
(எ) தொழில் :.......................................................................................
(ஏ) நியமனத் திகதி :.......................................................................................

(ஐ) கடந்த 5 ஆண்டுகளில் கொண்டிருக்கப்பட்ட வேறு பணிப்பாண்மை :............................

(ஒ) வேறு தொழில் அக்கறைகள் :....................................................................................

(ஓ) தொலைத்தொடர்பு முறைமைகளையும் விண்ணப்பிக்கப்படும் சேவைகளையும் நடத்துவதற்கு இயைபான பிண்ணனியினதும் ஏதேனும் அனுபவத்தினதும் பொழிப்பு :........................................................................

*3.2 பங்குதாரர்கள் :*

விண்ணப்பதாரர் கம்பனி பங்கு மூலதனத்தின் விவரங்களை (பங்குகளின் வகுப்பு, பங்குகளின் ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள பங்குகளின் எண்ணிக்கையும் பெறுமதியும்) 5% அல்லது அதற்கு மேற்பட்ட பங்குடைமையைக் கொண்டுள்ள பங்குதாரர்கள் ஒவ்வொருவரினதும் பின்வரும் தகவல். (பங்குச் சான்றிதழ்களினதும் வேறு இயைபான ஆவணங்களினதும் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.) கம்பனி, கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டிருந்தால் பங்குகளின் வகுப்பு பற்றிய விவரங்களைத் தரவும். பங்காண்மையின் விடயத்தில் பங்காண்மையின் விவரங்களைத் தரவும் (ஏற்புடைத்தாயின்)

(அ) முழுப் பெயர் :....................................................................................

(ஆ) பிறந்த திகதி :....................................................................................

(இ) நாட்டினம் :....................................................................................

(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச் சீட்டு இலக்கம் :..............................................

(உ) பிரசாவுரிமை :....................................................................................

(ஊ) சொந்த முகவரி :....................................................................................

(எ) பங்குகளின் நூற்று வீதம் :....................................................................................

(ஏ) பங்குகள் வழங்கப்பட்ட திகதி :....................................................................................

*3.3 குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் நடத்தை :*

விண்ணப்பதாரர் குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் (பிரதான நிறைவேற்று அலுவலரையும் பணிப்பாளர் ஒவ்வொருவரையும் பங்குடைமையின் 5% வீதத்திற்கும் அதிகமான பங்குளையுடைய பங்குதாரர்களையும் பற்றிய) பின்வரும் தகவலை வழங்குதல் வேண்டும் :–

(அ) கம்பனியின் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுள் எவராவது கலைத்தலுக்குட்பட்டுள்ள அல்லது வங்கி முறிந்துள்ள கம்பனியொன்றின் ஆளொருவராக இருந்துள்ளாரா? (ஆம் எனில் பெயர்களையும் விவரங்களையும் தரவும்)

(ஆ) கம்பனியின் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுள் எவராவது எந்தக் கம்பனியின் உரிமம் உரிமத்தின் நிபந்தனையை/ நிபந்தனைகளை மீறியமைக்காக ஏதேனும் நாட்டின் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையால் அல்லது அரசாங்கத்தால்/ அமைச்சினால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பனியொன்றின் ஆளொருவராக இருந்துள்ளரா? (ஆம் எனில் பெயர்களையும் விவரங்களையும் தரவும்)

(இ) குறித்துரைக்கப்பட்ட ஆட்களுள் எவராவது தொலைத்தொடர்பு முறைமையை வழங்குவதற்கு அல்லது நடத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொழிலில் நன்மையடையக்கூடிய அக்கறை கொண்டுள்ளாரா? ஆம் எனில் பெயர்களையும் விவரங்களையும் தரவும்.)

(ஈ) கம்பனியின் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுள் எவராவது நேர்மையின்மை, மோசடி, களவு அல்லது வன்முறை சம்பந்தமாக ஏதேனும் நியாயாதிக்கம்கொண்ட ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் எப்போதாவது அல்லது தற்பொழுது எதிராளியாக அல்லது எதிர்வாதியாக இருந்துள்ளாரா? ஆம் எனில் பெயர்களையும் விவரங்களையும் தரவும்).

*3.4 கம்பனி பற்றிய விவரம் :*

விண்ணப்பதாரர்–

(அ) கம்பனியின் முகாமைத்துவ அமைப்பின் வரைபட அமைப்புத் தோற்றத்தையும் விளக்க விவரணம் ஒன்றையும் தரவும். பணிப்பாளர்களின் கல்வி மற்றும் உயர்தொழில் தகைமைகளையும் கடந்த பத்து ஆண்டுகளுக்கு வாழ்க்கைத் தொழில் வரலாற்றையும் காட்டும் சுருக்கமான விவரத் தொகுப்பையும் உட்படுத்தவும். தொலைத்தொடர்புகள் வலையமைப்புகளைத் தாபித்தல், முகாமை செய்தல் என்பவற்றிற்கு இயைபான பணிப்பாளர்களின் குறித்துரைக்கப்பட்ட வேறு அனுபவத்தையும் விவரிக்கவும்.

(ஆ) விண்ணப்பதாரர் எந்த ஆளணியினரின் உதவியைப் பெறமுடியுமோ அந்த ஆளணியினரின் எண்ணிக்கைகளை அறிந்திருந்தால் அந்த எண்ணிக்கைகள் உட்பட முகவராண்மைகள், ஆலோசகர்கள் முதலானோருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும் எவையேனும் நடவடிக்கைகளை நிரற்படுத்தவும்.

(இ) கம்பனிக்கான பின்வரும் உயர்தொழில் ஆலோசகர்களின் பெயர்கள், முகவரிகள் அத்துடன் அவர்களுக்கான வேறு ஒப்பந்த விவரங்களைத் தரவும்.

(i) தொழில்நுட்பம் (ii) சட்டம் (iii) நிதி (iv) கணக்காய்வாளர்

(ஈ) கம்பனி அல்லது ஏதேனும் இணை நிறுவனம் இலங்கையில் அல்லது வேறோர் நாட்டில் தொலைத்தொடர்பு முறைமைகள் உரிமம் வைத்திருக்கின்றதா அல்லது எப்போதாவது வைத்திருந்ததா எனக் குறிப்பிடவும்.

(உ) இலங்கையில் அல்லது வேறோர் நாட்டில் தொலைத்தொடர்பு முறைமைகள் உரிமத்திற்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளதா எனக் குறிப்பிடவும்.

(ஊ) இலங்கையில் அல்லது வேறோர் நாட்டில் தொலைத்தொடர்பு முறைமைகள் உரிமமொன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளதா எனக் குறிப்பிடவும்.

*பாகம் 4*

**4. உத்தேசிக்கப்பட்ட சேவைகளின் விவரணம்:**

சேவைகள், விண்ணப்பிக்கப்படும் உரிமத்திற்கு இயைபானவையா என்பதனை உறுதிப்படுத்துவதனை ஆணைக்குழுவுக்கு இயலச் செய்வதற்கென விண்ணப்பதாரர் வழங்கப்படுவதற்கென உத்தேசிக்கப்படும் சேவைகள் பற்றிய போதியளவு விவரங்களை வழங்குதல் வேண்டும். விவரங்களுள் பின்வருவன அடங்கும் :

(அ) உத்தேசிக்கப்படும் சேவை ஒவ்வொன்றினதும் விவரணமும் ஏற்புடைத்தான விதிப்பனவுகளும்.

(ஆ) நாடளாவியதா அல்லது பிராந்தியத்திற்கு மட்டுமா என்ற புவியியல் பரப்பு.

(இ) சேவையை வழங்கப்பெறவிருப்பதாக எதிர்பார்க்கப்பட்ட வாடிக்கையாளர்களின் பிரிவுகளும் குறிவைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர் தளமும்.

(ஈ) சேவையை ஆரம்பிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட திகதி, நடைமுறைப்படுத்தும் அட்டவணை மற்றும் வளர்ச்சித்திட்டம்.

(உ) சர்வதேச சேவைகளின் கடப்பாடுகளை வழங்குவதற்காக கையாளப்படவுள்ள வழிமறைகள்.

(ஊ) பொதுமக்களுக்கு வழங்கப்படும் தகவல் விவரத்தொகுப்பு சேவைகள் பற்றிய விவரங்கள்.

(எ) விண்ணப்பதாரரால் வழங்கப்படுவதற்கென உத்தேசிக்கப்பட்ட அவசரகால சேவைகள் பற்றிய விவரங்கள்.

*பாகம் 5 :*

**5. கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கை:**

உங்கள் விண்ணபத்துடன் கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையொன்றும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். இதில் எந்தத் தொலைத்தொடர்பு முறைமைக்கான உரிமத்திற்கு விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொலைத்தொடர்பு முறைமையைத் தாபிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் பேணுவதற்கும் விண்ணப்பதாரரின் கம்பனியினுடைய தொழில்நுட்பம், நிதி, விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்துதல், வாடிக்கையாளர் சேவை என்பன தொடர்பான முகாமைத்துவ ஆற்றல்கள் மற்றும் திறமைகள் பற்றிய விவரங்கள் அடங்குதல் வேண்டும். இந்த வரையறைகள் உரிமமளிக்கும் நடவடிக்கைமுறையும் வழிகாட்டிகளும் என்பதன் 6 ஆம் பிரிவில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பம் கணிப்பீடு செய்யப்படும்போது கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல் கருத்திற்கொள்ளப்படும்.

*பாகம் 6*

**வெளிப்படுத்துகை**

................................................................................................ ஆகிய நான் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல் எல்லாவிதத்திலும் சரியானவையே என அத்தாட்சிப்படுத்துவதுடன் உரிமம் வழங்கப்படுவதன்பேரில் எந்த நியதி நிபந்தனைகளின்மீது உரிமம் வழங்கப்பட்டதோ அந்த நியதி நிபந்தனைகளுக்கு அமைந்து நடப்பதற்கும் இத்தால் பொறுப்பேற்கின்றேன். தவறான தகவலின் அடிப்படையில் எனக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதென காண்பிக்கப்படின் உரிமம் இல்லாதொழிக்கப்படலாம் என்பதனையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

.......................................................
கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம்.

திகதி :.........................

**விண்ணப்பத்தை செவ்வை பார்த்தல்**

(அ) விண்ணப்பத்திற்கான தேவைப்பாடுகள் :

(1) விண்ணப்பத்தை முறைவழிப்படுத்தும் கட்டணம் ரூபா 2,00,000 உள்ளடக்கப்பட்டுள்ளதா ? : ஆம்/இல்லை

(2) விண்ணப்பத்தின் பாகங்கள் 1, 2, 3, 4 என்பன தோதான விதத்தில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா ? : ஆம்/இல்லை

(3) விண்ணப்பத்தின் பாகம் 5 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிககை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா? : ஆம்/இல்லை

(4) பாம் 6 இல் உள்ள வெளிப்படுத்துகை கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியால் கையொப்பமிடப் பட்டுள்ளதா ? : ஆம்/இல்லை

(5) இணைத்தல்கள், கருத்திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கை Vன்பன உட்பட விண்ணப்பத்தின் 3 பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா ? : ஆம்/இல்லை

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

(1) தேசிய அடையாள அட்டையின்/கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கடவுச்சீட்டின் இயைபான பக்கங்களின் பிரதியொன்று : ஆம்/இல்லை

(2) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் நியமனத்தை உறுதிப்படுத்தி பணிப்பாளர் சபையிடமிருந்து கடிதமொன்று : ஆம்/இல்லை

(3) கம்பனியின் வியாபாரக் கூட்டிணைப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று : ஆம்/இல்லை

(4) கம்பனியின் அமைப்புப் புறவிதிகளினதும் அகவிதிகளினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று : ஆம்/இல்லை

(5) பிரதம நிறைவேற்று அலுவலரினதும் பணிப்பாளர்களினதும் 5% வீதத்திற்கும் அதிகமான பங்குகளைக்கொண்டுள்ள பங்காளர்களினதும் தேசிய அடையாள அட்டையின்/கடவுச்சீட்டின் இயைபான பக்கங்களினதும் அவர்களின் நடத்தை பற்றிய வேறு இயைபான ஆவணங்களினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று : ஆம்/இல்லை

(6) பங்குச் சான்றிதழ்களினதும் இயைபான வேறு ஆவணங்களினதும் பிரதிகள் : ஆம்/இல்லை

**விண்ணப்பத்தைக் கணிப்பீடு செய்யும் மூலப்பிரமாணம்**

மூலப்பிரமாணம், விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதுடன் நேரொத்த சிறப்பம்சங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட மூலப்பிரமாணத்தின்படி பிரிக்கப்படும் :-

| *இல.* | *கணிப்பீடு செய்யும் மூலப்பிரமாணம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1 | **தொழில்நுட்பவியல்** | 30 |
| | வலையமைப்பு வடிவம்<br>வலையமைப்பு மேவுகைத் திட்டங்களும் வெளிப்பாடும்<br>முதுகெலும்பு வலையமைப்பு வடிவமும் இணைத்தொடரும்<br>மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் பயனுறுதியுள்ள பயன்பாடு<br>ஏனைய தொழிற்பாட்டாளர்களுடன் உட்கட்டமைப்பு வசதிகளைப் பகிர்ந்துகொள்ளல்<br>சூழல் பற்றிய அக்கறை | |
| 2 | **நிதி** | 20 |
| | மூலதனமும் நிதியளிப்புப் பகுப்பாய்வும்<br>நிதி மற்றும் முதலீட்டுப் பகுப்பாய்வு | |
| 3 | **விற்பனைகளும் சந்தைப்படுத்துதலும்** | 10 |
| | சந்தை திருப்புமுனைகளின் பகுப்பாய்வு<br>விற்பனைத் திட்டங்கள்<br>சந்தை அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தும் செயல்நுட்பங்கள்<br>அறிமுகக் கடப்பாட்டு செயல்நுட்பங்கள்<br>சந்தைப்படுத்துவதற்கான நடைமுறைக்கோவை | |
| 4 | **வாடிக்கையாளர் சேவை** | 10 |
| | வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் உத்தேச சேவை மட்டங்கள்<br>வாடிக்கையாளர் ஒப்பந்தங்கள்<br>பட்டியல் தயாரித்தல் வாடிக்கையாளர்களின் விசாரணைகளைக் கையாளுதல்<br>முறைப்பாடுகள் என்பன தொடர்பில் நடைமுறைக்கோவை | |
| 5 | **முகாமைத்துவம்** | 10 |
| | உத்தேசிக்கப்பட்ட முகாமைத்துவ அமைப்பு<br>தொழில் பிறப்பித்தல்<br>பணியாட்டொகுதிப் பயிற்சி மற்றும் மனிதவள முகாமைத்துவம் | |
| 6 | **கம்பனியின் விவரம்** | 10 |
| | கூட்டிணைத்தல்<br>பிரதம நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர்கள், பங்ளகுதாரர்கள்<br>கம்பனி உள்ளூர் சொத்தாண்மை<br>வங்கியாளர்களின் உத்தரவாதம் | |
| 7 | **விதிப்பனவுகளும் கடப்பாடுகளும்** | 10 |
| | உத்தேச விதிப்பனவு அமைப்பு<br>சர்வதேச சேவை வழங்குவதற்கான கடப்பாடுகள்<br>அவசர சேவைகளுக்கான கடப்பாடு | |

*3-558*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.